Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No.CC.NO. 141/2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No.03 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தினேஷ் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. ராமமூர்த்தி | தொழில் | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 20th day of February 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-** (எதிரி ஆஜர்)

1. நான் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு எங்கள் காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு. இராஜசேகரன் பணிமாறுதல் பெற்று சென்று விட்டதால் நான் இவ்வழக்கில் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். திரு. இராஜசேகரன் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 30.03.2022 அன்று பகல் 12.00 மணியளவில் திருப்பத்தூர் நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கௌதம்பேட்டை பகுதியில் ரோந்து பணியல் ஈடுபட்டபோது இவ்வழக்கின் எதிரி அவரது வீட்டின் பின்புறம் ஒரு பையை வைத்து அமர்ந்திருந்தவர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை விசாரித்தபோது, அவரிடம் கர்நாடக மாநில மதுபான பாக்கெட்டுகள் 90 ML கொண்ட Old secret XXX rum எண்ணிக்கை 06 பாக்கெட்டுகள் 2), 180 ML கொண்ட Diamond XXX Rum –04 மதுபான பாட்டில்கள் அவர் விற்பணைக்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். மேற்படி பொருட்களை என்னுடன் ரோந்து பணியில ஈடுபட்டிருந்த பெண்காவலர் திருமதி.அமுல் மற்றும் திருமதி. சர்மிளா ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்குஉட்படுத்தினார். பின்பு அ.சா.1, 2 சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கு சான்று பொருள் அ.சா.பொ.1 நீதிமன்றத்தில் ஆஜர் செய்து எனது விசாரணை முடித்து எதிரி

மீது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவுகள் 4(1)(a), 4(1)(h)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 02 ஆகவும், படிவம் 95 அ.சா.ஆ. 03 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாணை**

ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புள்ளிவிரத்திற்காக தொடுக்கப்பட்ட வழக்கு என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Sd/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.